அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

விளம்பி ஆண்டு தை - மாசி பிப்ரவரி 2019 முரசு 12 ஒலி 140



பிரதி ஒன்றுக்கு ரூ. 10/- ஆண்டு சந்தா ரூ. 120/-

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



நினைத்தாலே முக்தி தரும் திருவண்ணாமலையில்...

# பஞ்ச சுத்தி கிரியா

உடல்உறு பிணியால் உயிர்உடல் கெடாவகை
அடல்உறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
- அகவல்

"உடல் நலம், மன அமைதி பெற்று ஆரோக்கிய வாழ்வு வாழ மூன்று நாட்கள்"



**இம்முகாமில்...**

- பஞ்ச சுத்தி முறை
- யோகாசனம்
- பிராணாயாமம்
- மௌனம்
- தியானம்
- பக்தி

போன்றவை கற்றுத்தரப்படும்.

**மார்ச்**
**08, 09, 10**
**2019**
வெள்ளி, சனி & ஞாயிறு

நாம் பலபிறவிகளையும் தப்பி மேலான இந்த மனிதப்பிறப்பு எடுத்தது அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அருளைப் பெறுவதற்கே - வள்ளலார்.

**இடம்: வள்ளலார் சன்மார்க்க சங்கம்,**
வாயு லிங்கம் எதிரில், கிரிவலப்பாதை,
திருவண்ணாமலை.

## பயிற்சியில் கலந்து கொள்ளும் அன்பர்கள் கவனத்திற்கு


1. அன்பர்கள் மார்ச் 07 வியாழன் இரவிற்குள் வந்துவிட வேண்டும்.
2. பயிற்சியில் கலந்து கொள்வோர் 18-60 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும்.
3. யோகாசனம் செய்வதற்கும், படுப்பதற்கும் இரண்டு பெட்ஷீட் மேலும்
   ஆண்கள்: T.ஷர்ட், ஷார்ட்ஸ் பெண்கள்: சுடிதார் போன்ற ஆடைகளை எடுத்துவரவும்.
   குறிப்பு எடுக்க நோட்டு பேனா மற்றும் ஏர் பில்லோ எடுத்துவரவும்.

**சைவ உணவாளர்களுக்கு மட்டுமே அனுமதி**

**உங்கள் ஆரோக்கியத்திற்கான நன்கொடை ரூ. 1,500/-**

30 நபர்களுக்கு மட்டுமே அனுமதி

முன்பதிவிற்கு:
**88385 40176, 89403 96760**



# திருச்செவிக்கு விண்ணப்பம்



ஓதி உணர்ந்து மகிழ்க!

## மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

## முறையீடு

தன்பெருமை தான்அறியாத் தன்மையனே எனது
தனித்தலைவா என்னுயிர்க்குள் இனித்த தனிச்சுவையே
நின்பெருமை நான்அறியேன் நான்மட்டோ அறியேன்
நெடுமால் நான்முகன் முதலா மூர்த்திகளும் அறியார்
அன்புறும் ஆகமமறைகள் அறியாவே எனினும்
அவரும் அவைகளும் சிலசொல் அணிகின்றார் நினக்கே
என்பருவம் குறியாதே எனைஆண்ட அரசே
யானும் அவர்போல் அணிகின்றேன் அணிந்து இங்குஅருளே.

## பிரார்த்தனை

எங்குறு தீமையும் எனைத் தொடராவகை
கங்குலும் பகலும் மெய்க்காவல்செய் துணையே
தாய் கருப்பையினுள் தங்கிய உயிர்களை
ஆய்வுறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
முட்டைவாய்ப் பையிலும் முழு உயிர்த்திரள்களை
அட்டமே காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
நிலம்பெறும் உயிர்வகை நீள்குழு அனைத்தும்
அலம்பெறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
வேர்வுற உதித்த மிகும் உயிர்த்திரள்களை
ஆர்வுறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
உடல்வுறு பிணியால் உயிர்உடல் கெடாவகை
அடல்உறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
சிசுமுதல் பருவச் செயல்களின் உயிர்களை
அசைவறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
பாடுறும் அவத்தைகள் பலவினும் உயிர்களை
ஆடுறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி

திருச்சிற்றம்பலம்

# சிந்தனை சாதனை

ஒரு வீட்டை கட்டுவதற்கு முதலில் நாம் திட்டமிடுகிறோம். பிறகு கட்டிடக்கலை தெரிந்த ஒருவரிடம் நம் எண்ணத்தைத் தெரிவித்து முறையாக வடிவமைத்து உறுதியாக கட்டுகிறோம். ஆனால், நம் வாழ்வைக் குறித்த முறையான திட்டமிடுதலும் இல்லை. வாழ்ந்த பெரியோரைத் துணைக்கொண்டு வாழக் கற்றுக் கொள்வதுமில்லை. இன்றைய காலச் சூழ்நிலை நம்மை துரத்த நாம் வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறோம்.

**“உன் எண்ணத்தை கவனி அதுதான் உன் வார்த்தையாக மாறப் போகிறது.**
**உன் வார்த்தையை கவனி அதுதான் உன் செயலாக பரிணமிக்கப் போகிறது.**
**உன் செயலைக் கவனி அதுதான் உன் பழக்கவழக்கமாக மாறப் போகிறது.**
**உன் பழக்கவழக்கத்தைக் கவனி அதுதான் உன் விதியாக மாறப்போகிறது”**
என்பது ஆன்றோர் வாக்கு.

நம் விதிக்குக் காரணம் நம் எண்ணங்களே. நம் சிந்தனையில் மாற்றத்தை ஏற்படுத்தாமல் நம் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. இதுதான் நிதர்சனமான உண்மை. இதனால்தான், நம் ஆன்றோர்கள் “எண்ணம்போல் வாழ்வு” என அருளியுள்ளார்கள். இதை ஒரு சிறு கதையின் மூலம் காணலாம்.

குகன் தினமும் தன் வீட்டில் வளர்த்து வரும் பசுவின் பாலைக் கறந்து விற்று ஜீவனம் செய்து வந்தான். ஒவ்வொரு முறை அந்தப் பசுவை அவன் காணும்போதும் அதன் கொம்பின் அமைப்பு ஒரு முக்கோணத்தைப் போன்று காட்சியளிக்கும். அந்த கொம்புகளுக்கு இடையே தன் தலையை எப்படி நுழைப்பது என பலநாள் பலவிதமாக சிந்தனை செய்து வந்தான்.

ஒருநாள் காலையில் வழக்கம்போல் பால் கறந்துவிட்டு இம்முறை எப்படியும் தலையை நுழைத்துவிட வேண்டும் என்ற ஆவலில் தலையை உள்ளே நுழைத்தான். தலை மாட்டிக் கொண்டது. எத்தனை முயற்சி செய்தும் அவனால் தலையை வெளியே எடுக்க முடியவில்லை. எப்படி முயன்றும் முடியாததால் ‘காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்!’ எனக் கூச்சலிட்டான். மேலும், பசுவும் பயத்தால் மிரண்டு தலையை வேகமாக ஆட்டத் தொடங்கியது. அதுமட்டுமல்லால், பாரம் தாங்காமல் குனிந்திருந்த தலையை பலம் கொண்டு நிமிர்த்த முயன்றது.

*இதனால் அவன் அந்தரத்தில் தொங்கினான். வலி தாங்க முடியாமல் மேலும் கத்த ஆரம்பித்தான். அவனின் கதறலைக் கேட்டு அக்கம்பக்கம் உள்ளோர் ஓடிவந்து மாட்டின் தலையை சிலர் பிடிக்க அவன் காலை சிலர் பிடித்து இழுத்து காப்பாற்றினர்.*

*பிறகு அனைவரும் 'ஏன்டா உனக்கு அறிவு இல்லையா? மாட்டு கொம்பில் தலையை யாராவது விடுவாங்களா? யோசிக்க மாட்டியா?' என திட்டினர்.*

*அதற்கு சிறிதும் தாமதியாமல், "யார் சொன்னது நான் யோசிக்கவில்லை என்று. மூன்று ஆண்டுகளாக எப்படி தலையை மாட்டின் கொம்பில் விடுவது என யோசித்துதான் செய்தேன் தெரியுமா!" என்றான். இதைக் கேட்ட அனைவரும் எள்ளி நகைத்தனர்.*

*ஆம் அன்பர்களே!* **நாம் ஒவ்வொருவரும் ஒரு குகன்தான். ஏனென்றால் நாமும் அவனைப் போலவே என்ன சிந்திக்கிறோம் என்று தெரியாமலேயே தேவையில்லாதவற்றைச் சிந்தித்து அதை செயல்படுத்தி துன்பத்திற்கு ஆளாகின்றோம்.**

*ஐயா! எண்ணங்களே விதிவசப்பட்டதுதானே என்று தாம் வினவலாம். இஃது உண்மைதான். ஆனால், நல்வினை காரணமாக நல்ல எண்ணங்களும் எழுகின்றதல்லவா.*

**குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்**
**மிகைநாடி மிக்க கொளல்** *என திருவள்ளுவப் பெருந்தகை அருளியவாறு நல்ல எண்ணங்களை தேர்வு செய்து அதைச் சொல்லாகவும், செயலாகவும் வெளிப்படுத்தினால் நமக்கும் பிறருக்கும் நன்மை பயக்கும் அல்லவா.* **"காம குரோதாதிகள் (விறுப்பு வெறுப்பு) நேரிடும் காலத்தில் ஞான அறிவினால் தடுத்துக் கொள்க"** *என நம் வள்ளல் பெருமானாரும் அருளியுள்ளார். தடுத்துக்கொள்ளும் சுதந்திரம் கடவுளால் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், வள்ளல் பெருமான் போன்ற சித்த புருஷர்கள் எது தருமம் என கூறியுள்ளனர். அதைக் கருத்தில் கொண்டு தீய எண்ணங்கள் எழுந்தாலும் அதை செயலாக்காமல் நிறுத்துவது நம் சுதந்திரம். மனிதனைத் தவிற மற்ற ஜீவராசிகளுக்கு அந்த சுதந்திரம் கொடுக்கப்படவில்லை. மேலும், அந்த தீய எண்ணங்களும் நாம் தொடர்ந்து செய்யும் நற்கர்மங்களால் உண்டாகும் புண்ணியத்தால் மாற்றமடைந்துவிடும்.*

**இன்றைய அளவில் நாம் அநேக துன்பத்திற்கு ஆளாவதற்குக் காரணம் நம் பெற்றோர்கள் நமக்கு சிறுவயதிலேயே தர்ம நூல்களை பயிற்றுவிக்காது போனதுதான்.** *நமது கல்வி முறையிலும் தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல் என அனைத்தையும் கற்றுக் கொடுக்கின்றனர். ஆனால், எப்படி முறையாக சிந்திப்பது* (How to think properly) *என்பதைப் பற்றி மட்டும் எந்த நிலையிலும் கற்றுக் கொடுப்பதில்லை. அதை நம் ஆன்மீக குருமார்கள் மட்டுமே கற்றுத் தருகின்றனர்.*

உடல் வளர்ச்சிக்கு முறையாக பக்குவப்படுத்தப்பட்ட ஆகாரம் தேவை. அதுபோல் ஆன்ம வளர்ச்சிக்கு முறையாக சிந்தித்தல் என்பது அவசியம். ஒரு செடி வளர அதன் வேர் பகுதியில் தண்ணீர் ஊற்றுகின்றோம். அது அந்தச் செடியின் எல்லா பகுதிகளுக்கும் சென்று சேர்த்துவிடும். அதுபோல், ஆன்ம வளர்ச்சிக்கு எண்ணங்களே முக்கியமானவை. அது சரியானால் நம் வாழ்வு நல்லவண்ணம் அமையும். குருமார்கள் அருளிய நூல்கள் ஆன்ம வளர்ச்சி சார்ந்தது. அது சிறு வயது முதலே ஆன்மாவிற்கான கல்வியை பயிற்றுவிக்கிறது.

உதாரணத்திற்கு, உயிர் எழுத்துக்களை பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்க நினைத்த ஔவை பிராட்டியார் "அறம் செய விரும்பு; ஆறுவது சினம்'' என ஆரம்பிக்கிறார்.

ஜீவர்களாகிய நமக்கு இருக்கும் குற்றத்தினால் சுயநலமான சிந்தனையே உருவாகும். இஃது செயற்கை குணம் என்பார் நம் வள்ளல் பெருமானார். இச்சிந்தனை சொல்லாகவோ, செயலாவோ பரிணமித்தால் அது நமக்கும் பிறருக்கும் துன்பத்தையே விளைவிக்கும். மேலும், பாவ கர்மத்தையும் சேர்த்துவிடும். இதிலிருந்து நம்மைக் காக்க முதலில் நம் சிந்தனையில் மாற்றம் தேவை. அதுவும் "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" என எண்ணியே ஔவை அறம் செய விரும்பு என்று தொடங்கும் ஆத்திச்சூடி செய்யுளை குழந்தைகளுக்காகவே இயற்றினார். அதுமட்டுமல்லாது 'தயவு' என்பதே ஆன்மாக்களாகிய நம் இயற்கை குணம்.

நம்முடைய சிந்தனை அகன்றதாக, ஆழமானதாக, கூர்மையானதாக இருக்க வேண்டும் என்பது கருத்து. இவை மூன்றும் **அறம் – தயவு** என்ற மூன்று எழுத்துக்குள் அடங்கும். எனவேதான் ஔவை அகரத்தை இவ்விதம் கற்பிக்கிறார்.

**வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத் தனைய உயர்வு**
**அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு** இந்த இரண்டு குறட்பாக்களும் இங்கே சிந்திக்கத் தக்கவை.

எண்ணங்களில் இருவிதம் உண்டு. ஒன்று நம்மை மேலேற்றும் எண்ணங்கள். வாழ்விக்கும் எண்ணங்கள். மற்றொன்று நம்மை கீழிறக்கும் எண்ணங்கள். உயர்வான சிந்தனையின் பொருட்டே நம் உயர்வும் இருக்கின்றது. அப்படியிருக்க நம்முடைய சிந்தனை எப்படி இருக்கின்றது? இதை நமது பட்டினத்து சுவாமி பின்வருமாறு கூறி வருந்துகின்றார்.

**அன்னவிசாரம் அதுவே விசாரம் அதுஒழிந்தால்**
**சொன்ன விசாரம் தொலையா விசாரம்; தோகையரைப்**

**பன்ன விசாரம் பலகால் விசாரம்; இப்பாவி நெஞ்சுக்கு**
**என்ன விசாரம் வைத்தாய் இறைவா கச்சி ஏகம்பனே**

அதாவது, இந்த பொய்யான உடலைப் வளர்ப்பதற்கு உணவைத் தேடுவது அன்ன விசாரம். அதை ஒழித்தால் பொருள் தேடும் விசாரம் நீங்காத விசாரமாம். அதுவும் ஒருவிழியாக நீங்கப்பெற்றால் அழகிய பெண்களைத் தேடும் விசாரம் பலகாலத்துக்கும் நீங்கவே நீங்காத விசாரம் என்கின்றார். இதையே நம் வள்ளல் பெருமானாரும்

**வருகணைத்து வாழ்ந்திடுமோ விழுமோ இந்த மலக்கூடு என்று**
**அறிஞரெலாம் வருந்தக் கேட்டும்**
**அருகணைத்துக் கொளப்பெண்பேய் எங்கே**
**மேட்டுக்கு அடைத்திட வெண்சோறெங்கே**
**ஆடை எங்கே இருகணுக்கு வியப்புளங்கே**
**வசதியான இடம்எங்கே என்று திரிந்து இளைத்தேன் அல்லால்**
**ஒருகணத்தும் உனைநினைந்தது உண்டோ** என்று பாடியுள்ளார். இவையாவும் இகலோக விசாரணையே – சிந்தனையே.

மேலும் வேதத்தில் பரஞானம், அபரஞானம் என இருவகை ஞானங்கள் கூறப்படுகின்றது. அதாவது ஐம்பொறிகளின் மூலம் மனதை புறவுலகில் செலுத்திப் பெறுகின்ற ஞானம் **அபரஞானம்.** ஐம்பொறிகளுக்கு அப்பால் உள்ள மெய்ப்பொருளைப் பற்றி தெரிவிக்கின்ற ஞானம் **பரஞானம்.**

**வேத சொற்களின் உச்சரிப்பைப் பற்றி சொல்லுவது சிக்ஷா. மொழியியலைப் பற்றிச் சொல்லுவது வ்யாகரணம். யாப்பு இலக்கணம் பற்றிச் சொல்லுவது சந்தஸ். சொற்பிறப்பு பற்றி சொல்லுவது நிருப்தம். ஜோதிடம் பற்றிச் சொல்லுவது ஜோதிஷம். வேதத்தில் கூறப்பட்ட யாகங்களை எப்படியெப்படிச் செய்வது என்று சொல்வது கல்பம்.**

**இந்த ஆறு அங்கங்களுமே அபரஞானங்களாகும். இவற்றில் எதைச் செய்தாலும் அது ஆன்மீகம் சார்ந்த செயல் அல்ல. அவை கடவுளருளையும் பெற்றுத் தராது.**

நமது வள்ளல் பெருமானாரும் "நூலனைத்தும் ஜாலம் என அறிக. செயல் அனைத்தும் அருள் ஒளியால் காண்க" எனவும், "கடவுளைத் தொழுவது ஒன்றே தொழிலாக உடையது கடமை" எனவும் அருளியுள்ளார். இதுவே பர ஞானம். பர விசாரம். உயர்ந்த சிந்தனை.

உண்மை இப்படியிருக்க நாம் பெறுதற்கரிய மானிடப் பிறப்பெடுத்தும் கீழான சிந்தனையிலேயே காலத்தைக் கழித்து வீண்போகின்றோம். "இங்குள்ள நீங்கள் எல்லவரும் இதுவரைக்கும் இருந்ததுபோல் இனியும் வீண்காலம் கழித்துக் கொண்டிராதீர்கள்.

*நீங்கள் எல்லவரும் நல்ல விசாரனையில் இருந்து கொண்டிருங்கள். அது என்னவென்றால் நம் நம்முடைய நிலை எப்படிப்பட்டது? நம்மை அதிஷ்டிக்கின்ற தெய்வத்தினுடைய நிலை எப்படிப்பட்டது? என்று விசாரிக்க வேண்டியது" என நம் வள்ளல் பெருமானார் பேருபதேசத்தில் அருளியுள்ளார்கள்.*

*இவ்விதம் சிந்திப்பதால் உண்டாகும் பலனைக் குறித்து நம் அருணகிரிப் பெருமான் கந்தர் அலங்காரத்தில் அருளியுள்ளதாவது*

**சிந்திக்கிலேன்; நின்று சேவிக்கிலேன்; தண்டைச் சிற்றடியை**
**வந்திக்கிலேன்; ஒன்றும் வாழ்த்துகிலேன் மயில்வாகனனைச்**
**சந்திக்கிலேன் பொய்யை நிந்திக்கிலேன் உண்மை சாதிக்கிலேன்**
**புந்திக் கிலேசமும் காயக் கிலேசமும் போக்குதற்கே**

*அறிவிலுள்ள (புந்தி) குற்றங்களும், நம் உடலிலுள்ள குற்றங்களும் நீங்க வேண்டுமானால் நாம் அனைவரும் பர விசாரணை செய்ய வேண்டும்.*

**பரம்பொருளே நின் பதநினையா வேகங் கொண்டு ஆர்த்த மனத்தால்**
**இவ்ஏழை மெலிந்துமிகச் சோகம் கொண்டு ஆர்த்து நிற்கின்றேன்**
*என்ற திருஅருட்பாவும் இங்கு கருதற்குரியது.*

*கர்மவினையின் காரணமாக நாம் உலகியல் சார்ந்த சிந்தனையில் மூழ்கவேண்டிய கட்டாயத்தில் இருந்தபோதிலும், நாமாகவே நேரத்தை ஒதுக்கி அவசியம் இந்த பர விசாரணையை செய்ய வேண்டும். இதுவே நாம் ஒவ்வொருவரும் உயிருக்கு ஆற்ற வேண்டிய உண்மையான கடமையாகும். மற்ற சிந்தனைகள் எல்லாம் அழியும் இவ்வுடலுக்கான சிந்தனைகளே.*

**கிடைப்பதற்கரிய மனிதப் பிறவி கிடைத்தும் ஆத்ம முக்திக்கு முயற்சி செய்யாத மனிதன் மூடனாவான். மேலும் அவன் தற்கொலை செய்து கொண்டவனாகிறான். உண்மை அல்லாத வெளி உலகப் பொருட்களை நாடுவதன் காரணமாக அவன் தன்னைத்தானே அழித்துக் கொள்கிறான்** *என விவேகசூடாமணியில் ஆதிசங்கரர் அருளியுள்ளார்கள். இதனை நம் வள்ளல் பெருமானாரும் திருஅருட்பாவில்*

**அன்னையே அப்பா திருச்சிற்றம்பலத்து என் ஐயனே இவ்வுலகதிலே**
**பொன்னையே உடையார் வறியவர் மடவார் புகலும் ஆடவர்**
**இவர்களுக்குள் <u>தன்னையே அறியாப் பிணியால் ஆவி தளர்கின்றார்</u>**
*என்று அருளுகின்றார்.*

*அன்பு உள்ளங்களே! இறுதியாக நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவெனில்,* **நீரிலிருக்கின்ற பாசியை கைகளால் விலக்குவதைப் போல், உண்மையைத் தெரிந்துகொள்ள முடியாத வண்ணம் நம் ஆன்மாவை மூடியிருக்கும் அஞ்ஞானத்திரையை விசார அதிஉஷ்ணத்தால் அல்லது**

**வேறு உஷ்ணங்களால் நீக்க முடியாது. எனவே, உயிர் வாழ்வில் உயர்வடைய எண்ணங்களே ஆதாரமாக உள்ளது. இந்த எண்ணங்கள் நெறிப்பட அறச் சிந்தனையும், அருள் சிந்தனையுமே ஆதாரம். இதனைப் பயிற்றுவிக்கும் கல்வியே கல்வி.**

ஆதி அந்தமும் இல்லதோர் அம்பலத்தாடும்
ஜோதி தன்னையே நினைமின்கள் சுகம்பெற விழைவீர்
நீதிகொண்டு உரைத்தேன் இது நீவீர் மேலேறும்
வீதி மற்றைய வீதிகள் கீழ்ச்செலும் வீதி. **– திருஅருட்பா**

**திருச்சிற்றம்பலம்**

**Advertisement**

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

**வள்ளலார் வில்லுப்பாட்டுக் குழு**

**சன்மார்க்க சங்கம், நடுப்பட்டு**

**ஆலம்பூண்டி அஞ்சல், செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம்-604 151.**

அன்புடையீர் வணக்கம்,

நாங்கள் சன்மார்க்க சங்கங்களிலும், ஆலய விழாக்களிலும், திருமணம், புதுமனைப் புகுவிழா போன்ற இல்ல நிகழ்வுகளிலும்

**✦சன்மார்க்கம் ✦வைணவம் ✦சைவம் ✦பக்தி இசை நிகழ்ச்சி**

தொடர்பாக வில்லுப்பாட்டு மற்றும் இசை நிகழ்ச்சி நடத்தி வருகின்றோம். தங்கள் பகுதிகளில் இதுபோன்ற நிகழ்ச்சி நடத்த விரும்புவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

தமிழக அரசின் கலைச்சுடர்மணி விருது பெற்ற

**ப. புருஷோத்தமன்** (வில்லுப்பாட்டு கலைஞர்)

செல்: 9487231064, 9790389934

## அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

*அன்பு உள்ளங்களே! கடந்த 10 ஆண்டுகளாக அன்பர்களின் தயவால்தான் நமது மாத இதழ் நடைபெற்று வருகின்றது. ஆனால் பெரும்பாலான அன்பர்கள் நமது மாத இதழுக்கு சந்தா செலுத்தாமலேயே உள்ளனர்.*

*இருப்பினும் இதுவொரு ஆன்மீக மாத இதழ் என்ற காரணத்தினால் அவர்களுக்கும் தவறாது அனுப்பிக்கொண்டுதான் இருக்கிறோம். இதை உணர்ந்து அன்பர்கள் நிலுவையிலுள்ள தங்கள் தொகையை தெரிந்துகொண்டு சந்தா தொகையினை செலுத்தி இம்மாத இதழ் தொடர்ந்து நடைபெற உதவுமாறு அன்போடு வேண்டுகின்றோம்.*

*சந்தாகால விபரம் பற்றி அறிய புத்தகத்தின் பின் அட்டையில் தங்கள் முகவரியின் கடைசி வரியினை காண்க.*

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் **8012680865**

# அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம்

**எனைத்தும் துன்பு இலா இயல் அளித்து**
**எண்ணிய அனைத்தும் தரும் சபை அருட்பெருஞ்ஜோதி**

*எனைத்தும் துன்பு இலா - எந்த ஒரு சிறு துன்பமும் இல்லாத*
*இயல் அளித்து - இயற்கை இன்பத்தை அளித்து*
*எண்ணிய அனைத்தும் - எண்ணிய எல்லாவற்றையும்*
*தரும் சபை - தருகின்ற சபையாகிய*
*அருட்பெருஞ்ஜோதி - அருட்பெருஞ்ஜோதியே!*

*எந்தவொரு சிறு துன்பமும் இல்லாத இயற்கை இன்பத்தை அளித்து எண்ணிய எல்லாவற்றையும் தருகின்ற சபையாகிய அருட்பெருஞ்ஜோதி.*

**பாணிப்பு இலதாய்ப் பரவினோர்க்கு அருள்புரி**
**ஆணிப்பொன் அம்பலத்து அருட்பெருஞ்ஜோதி**

*பாணிப்பு - காலந்தாழ்த்துதல்; தாமதம்*
*ஆணிப்பொன் - மாற்றுயர்ந்த பொன்.*

*பொன் வெள்ளி முதலான உயர்ந்த உலோகங்களின் தரத்தை (மாற்று) அறிவதற்கு அவற்றைக் கல்லில் உரைத்துப்பார்ப்பர். அக்கல்லுக்கு உரைகல் என்று பெயர்* (TOUCH STONE). *மாற்றுயர்ந்த பொன்னால் மாதிரியாக ஓர் ஆணி கெட்டியாய்ச் செய்து வைத்திருப்பர். அதற்கு உரையாணி என்று பெயர் (எழுத்தாணி, அச்சாணி என்பது போல). உரையாணியை உரைகல்லில் உரைத்து மாற்றுப்பார்ப்பர். உரையாணி செய்யப்பெறும் உயர்தரப் பொன் "ஆணிப்பொன்" என்று பெயர் பெற்றுவிட்டது. உரையாணியை (ஆணிப்பொன்னை) உரைத்தால் என்ன மாற்றுக் காட்டுகிறதோ, அந்த மாற்றை ஏனைய பொன்னும் காட்ட வேண்டும். மாதிரி ஆணிப் பொன்னின் தரத்தில், மாற்றில் உள்ள உயர்மாற்றுப் பொன் "ஆணிப்பொன்" எனப் பெயர் பெற்றது. இவ்வாறே முத்திலும் "ஆணிமுத்து" என்னும் வழக்குண்டு.*

*இறைவன் எழுந்தருளியுள்ள பொன்னம்பலம் மாற்றுயர்ந்த ஆணிப்பொன்னால் ஆனது. "ஆணிப்பொன்னம்பலத்தே கண்ட காட்சிகள் அற்புதக் காட்சியடி" என்ற வள்ளற் பெருமானின் திருவருட்பாப் பாடல் புகழ் பெற்றது.*

*பாணிப்பு இலதாய் - தாமதம் இல்லாமல்*

*பரவினோர்க்கு அருள்புரி - தன்னை வழிபடுவோர்க்கு அருள்புரிகின்ற*

*ஆணிப்பொன்னம்பலத்து - ஆணிப் பொன்னம்பலத்திலே எழுந்தருளியுள்ள (இங்கே ஆணிப்பொன்னம்பலம் என்பது சத்தியஞானசபை)*

*அருட்பெருஞ்ஜோதி - அருட்பெருஞ்ஜோதியே!*

*தாமதமின்றி, காலம் தாழ்த்தாது யாரொருவர் ஆணிப்பொன்னம்பலத்தே விளங்கும் அருட்பெருஞ்ஜோதியை வழிபடுகின்றார்களோ அவர்க்கே அருள்புரிகிறது.*

**எம்பலம் எனத் தொழுது ஏத்தினோர்க்கு அருள்புரி**
**அம்பலத்து ஆடல்செய் அருட்பெருஞ்ஜோதி**

*எம்பலம் - எமது பலம்; அம்பலம் - இறைவன் திருநடம் புரியும் இடம்.*

*அம்பலமே எம்பலம்; எம்முடைய பலம் என்று அம்பலத்தையே பலமாகக் கொண்டு தொழுது ஏத்தினோர்க்கு, அம்பலத்து ஆடல் செய்யும் அருட்பெருஞ்ஜோதி அருள் புரிகிறது.*

*"அம்பலத்தரசே" என்னும் நாமாவளியில்*

**அருட்பொது நடமிடு தாண்டவனே**
**அருட்பெருஞ் சோதிஎன் ஆண்டவனே**
**நடராஜ மாணிக்கம் ஒன்றதுவே**
**நண்ணுதல் ஆணிப்பொன் மன்றதுவே**

**நடராஜ பலமது நம்பலமே**
**நடமாடு வதுதிரு அம்பலமே** *என்ற வரிகள் ஈண்டு கருதத் தக்கன.*

*எம் பலம் என்று - அம்பலமே எமது பலம் என்று*

*தொழுது ஏத்தினோர்க்கு - வணங்கி வழிபட்டோருக்கு*

*அருள்புரி - அருள்புரிகின்ற*

*அருட்பெருஞ்ஜோதி - அருட்பெருஞ்ஜோதியே!*

*அம்பலத்தை வழிபட்டால் அதனுடைய பலம் நமக்குக் கிடைக்கும்.*

**திருச்சிற்றம்பலம்**

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

**Advertisement**

## மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

வடலூர் சித்தி வளாகம் என்கின்ற மேட்டு குப்பத்தில் நடைபெறும் பசி பிணி போக்கும் திரு பணிக்கு உதவ அனுகுவீர்.

திரு. நந்தி சரவணன் ஐயா
9842679999 / 9442327059

BNS eXS Lending Library

எக்சஸ் வாடகை நூலகம்

Books for All Ages

Wings of Wisdom

| Unlimited Books Starts @ INR 1200/. | |
|---|---|
| Scheme | Books at a Time |
| Super Reader | 10 |
| Book Lover | 5 |
| Elite Reader | 4 |
| Language Reader | 3 |
| Smart Reader | 1 |
| Door Delivery Available* | |

**HABITUAL READER**

# Pay as you take and read, like 10% to 15% on book cost of 15 days.

# % may change based on books popularity, availablity and price

## SOULFUL HOME

**Schemes starts @ INR 2400/=**

| Sno | Facilities | Super | Max | Book Max | Mag Max |
|---|---|---|---|---|---|
| 1 | Books | 30 | 15 | 7 | 2 |
| 2 | Magazines | 15 | 10 | 5 | 5 |
| 3 | Scheduled Visits | 12 | 12 | 12 | 24 |
| 4 | Unscheduled Visits | 6 | 6 | 3 | 0 |

Deposit INR - 500/



**Key advantages**

1. Lifetime membership @ 100% refundable deposit INR 500/=
2. Reading charges starts @10%
3. Hassle free door step service available

| AYYAPPAN THANGAL | VALASARAVAKKAM | PORUR | OMR | VADAPALANI |
|---|---|---|---|---|
| 26792007 | 42105700 | 42107304 | 42863478 | 42642491 |



தலை குனிந்து என்னை பார் .....
தலை நிமிர்ந்து
உன்னை நடக்க வைக்கின்றேன் – புத்தகம்

9444 408 804

# அத்தியாவசியம்? ESSENTIAL?

ஐயா என்னால் தேவையில்லாதவற்றை வருடக் கணக்கில் ஞாபகம் வைத்துக் கொள்ள முடிகிறது. ஆனால், தேவையானவற்றை ஞாபகம் வைத்துக் கொள்ள முடிவதில்லையே. தேவையானவற்றை நான் பெரும்பாலும் மறந்துவிடுகிறேனே ஏன்? என எங்களிடம் ஒருவர் கேட்டார். அந்த உரையாடலைத்தான் இங்கே உங்களோடு பகிர்ந்துகொள்கிறோம்.

அன்பரே! நீர் அதிர்ஷ்டசாலி. ஏனென்றால் குறைந்தபட்சம் நீர் தேவையானவற்றை காது கொடுத்துக் கேட்கிறீரே. பொதுவாக மக்கள் தேவையானவற்றை காது கொடுத்து கேட்பதே இல்லை. தேவையில்லாதனவற்றைத்தான் கேட்கின்றனர்.

"Essential" (தேவையான) என்கிற ஆங்கில வார்த்தை மிக அழகானது. அது "Essence" (சாறு, உள்ளுறைத் தன்மை) என்கிற வார்த்தையில் இருந்து வருகின்றது. **தேவையானவைதான் நமது உள்ளுறைத் தன்மையான ஆன்மாவிற்கு உணவாகின்றது.** எனவேதான், அது தேவையானது என்று அழைக்கப்படுகின்றது.

ஆனால், நமது மேற்பரப்பு மிகவும் தடித்துள்ளது. அது தேவையானதை நமது மையத்தை நோக்கிச் செல்ல அனுமதிப்பதில்லை. மாறாக இடையூறு செய்கிறது. இது மனம் கையாளும் தந்திரம். ஏனெனில், நமது உள்ளுயிர் மிகவும் சக்தி வாய்ந்ததாக மாறிவிட்டால் மனமானது அதனது பிடிப்பை இழந்துவிடும். எனவே, இந்த மேற்பரப்பு உள்ளுறைத் தன்மைக்கு ஊட்டமளிக்க அனுமதிப்பதில்லை. ஆனால், உயிர்க்குத் தேவையானவை எல்லாமே இம்மேற்பரப்பைத் தாண்டித்தான் உள்ளே செல்ல வேண்டும்.

தேவையானவை இரண்டு சதவீதம் மட்டுமே நமது மையத்தை சென்றடைய அனுமதி வழங்கப்படுவதாகவும் மீதம் 98% மையத்தைச் சென்றடைவதிலிருந்து தடுக்கப்படுகின்றது என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஆகவேதான், நாம் செழிப்பற்ற ஆன்மாவாக இருக்கிறோம். இது குறித்து நாம் ஏதாவது ஆழ்ந்து ஆராயவில்லை எனில் இது அப்படியேதான் இருக்கும்.

மனம் தேவையற்றதைத்தான் நேசிக்கும். வம்பு பேசுவதற்குத்தான் அது எப்போதும் பசியோடு இருக்கும். ஒன்றும் உபயோகமில்லாத விஷயமாக இருந்தாலும் அதைத்தான் மனம் மிகவும் கவனமாகக் கேட்கும்.

அனேக செய்தித் தாள்களும், விளம்பரப் பலகைகளும் நம்முடைய இந்த அறிவற்ற மனத்தை மூலதனமாக்கியே செயல்படுகின்றன.

குரு ஒருவர் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார். ஆனால், எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்தனர். (நம்முடைய வாழ்வில் தூக்கத்தை வரவழைக்கும் எல்லா முயற்சிகளும் தோற்றுப்போகும். தூக்க மாத்திரைகள்கூட வேலை செய்யாமல் போகும். ஆனால், நாம் ஏதாவது ஆன்மீக சொற்பொழிவுகளுக்குச் சென்றால் அங்கு தோற்றுப் போவதில்லை. அங்கு வெற்றி உடனடியாகக் கிடைக்கும்.) குருவிற்கு அது பிரச்சனையாகத் தோன்றவில்லை. ஏனெனில், அது அவரது வாழ்க்கை முழுவதும் அனுபவித்து வருவது. ஆனால், சிலபேர் குறட்டை விட்டு தூங்க ஆரம்பித்தனர். அதுதான் அவருக்கு மிகவும் இடைஞ்சலாகப் போய்விட்டது.

திடீரென அவர் தலையும் இல்லாமல், வாலும் இல்லாமல் அந்தச் சொற்பொழிவோடு சம்பந்தமில்லாமல் ஒரு கதையைக் கூற ஆரம்பித்தார்.

“ஒருமுறை எனக்கு இப்படித்தான் நேர்ந்தது. நான் காட்டு வழியே சென்றேன். அங்கு யாரும் இல்லை. நான் மட்டும் என்னுடைய கழுதையோடு வெறுமனே அங்கு இருந்தேன். அப்போது திடீரென்று அந்தக் கழுதை என்னுடன் பேச ஆரம்பித்தது” என்றார்.

உடனே அனைவரும் விழித்துவிட்டனர். அப்போது அவர் தனது கதையை அப்படியே விட்டுவிட்டு சொற்பொழிவை ஆரம்பித்து விட்டார். உடனே கூட்டத்தாரில் இருந்த ஒருவன், “அதன்பின் என்ன நடந்தது? அந்தக் கழுதை உங்களிடம் என்ன பேசியது?” என்று கேட்டான்.

அதற்கு அந்த குரு, **“நான் என்ன கூறுகிறேன் என்பதில் உங்களில் யாருக்கும் ஆர்வம் இல்லை. ஆனால், கழுதை என்ன கூறியது என்பதை கேட்பதற்கு மட்டும் நீங்கள் எல்லோரும் ஆர்வமாய் இருக்கிறீர்கள்”** என்று கூறினார்.

**கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்**
**தோட்கப் படாத செவி**

எனும் ‘கேள்வி’ என்ற அதிகாரத்தின்கீழ் வரும் இத்திருக்குறள் கருதற்குரியது. அதாவது, இயற்கையாகவே கேட்கக்கூடிய காதுகளாக இருந்தாலும் அவை நல்லோர் உரைகளைக் கேட்க மறுத்தால் செவிட்டுக் காதுகள் என்றே கூறப்படும் என்பதாம்.

மற்றொரு கதை என்னவெனில், சந்தை ஒன்றில் கோவிந்தன் என்பவருக்கு பலத்த அடிபட்டது. அவர் வலி தாங்க முடியாமல் பெரும் கூச்சலிட்டார். அங்கிருந்த மக்கள் அவருக்கு உதவி செய்து வீட்டில் கொண்டு சேர்த்தனர்.

பிறகு அவர் தன் சொந்த ஊரை விட்டு வேறுவேறு நகரங்களுக்கு வியாபாரம் தொடர்பாக செல்ல வேண்டியிருந்ததால் தன் ஊருக்கு வருவதற்கான வாய்ப்பே இல்லாது போனது. வருடங்கள் கடந்தன. அவருக்கும் வயதானது. முடி நரைத்தது. முதுமை காரணமாக தோல் சுருங்கி அடையாளம் காணமுடியாத வண்ணம் இருந்தார். இந்நிலையில் தனது சொந்த ஊரைப் பார்க்க ஆவல் கொண்டார் கோவிந்தன்.

தான் சுற்றித் திரிந்த தெருக்களுக்கெல்லாம் சென்றார். அவர் அடிபட்ட அந்த சந்தை தெருவை அடைந்தபோது அவருக்கு ஆச்சரியம். அங்குள்ள சாலை புதுப்பிக்கப்பட்டு அழகாக இருந்தது. அப்போது அருகிலிருந்த ஒரு முதியவரை அழைத்து 'இந்த சாலை எப்போது புதுப்பிக்கபட்டது?' என்று கேட்டார். அதற்கு அவர் 'ஓ அதுவா, கோவிந்தன்னு ஒருத்தனுக்கு அடிபட்டு வலிதாங்க முடியாம கத்தினான்ல அன்னைல இருந்து நாலு வருஷம், இரண்டு மாசம், நாலு நாள் கழிச்சி போட்டாங்க' என்றார் முதியவர். கோவிந்தனை மறந்துவிட்டாலும், அவன் கத்தியது ஏதோ சரித்திரப் பிரசத்திபெற்றதுபோல் ஆகிவிட்டது.

ஆகவே அன்பரே! இது உங்கள் மனதினுடைய பிரச்சனை மட்டும் அல்ல. இது எல்லோருடைய மனதிலும் உள்ள பிரச்சனைதான்.

ஏனென்றால், தேவையானவை என்று சொல்லப்பட்டவை எல்லாம் மனத்திற்கு எதிரானவை. நம் மனம் எந்தவொரு உண்மையையும் நம்முள் பிரவேசிக்க அனுமதிப்பதற்கு பயந்துகொண்டே இருக்கும். அது அந்த உண்மையை தட்டிக் கழிக்க ஆயிரத்தோரு காரணங்களை கண்டு பிடிக்கிறது. ஏனெனில், உண்மை நம் மனதைக் கலைத்துவிடும். ஆகவே, மனதிற்கு ஆதரவாக இருப்பதை மட்டுமே அது அனுமதிக்கிறது. அதுமட்டுமல்லாது, மனமே ஒரு குப்பை. ஆதலால் அது குப்பையைத்தான் சேகரிக்கும். அதையும் சந்தோஷமாக சேகரிக்கும்.

மேலும், மக்கள் மற்றவர்களைப் போல் நடிப்பதில் அதிகம் ஆர்வம் காட்டுகின்றனர். ஆன்மீகத் தளங்களில் நடக்கும் சடங்குகளிலும், சம்பிரதாயங்களிலும் நாம் ஈடுபடுகிறோம். ஆனால், ஏன் அவற்றைச் செய்கிறோம் என்றால், என் முன்னோர் செய்தனர் அதனால் நானும் செய்கின்றேன் என்போம். இப்படிச் செய்வதால் எந்த அர்ப்பணிப்பும் நம்முள் நடவாது. அது ஒப்படைத்தலும் ஆகாது. வழிபாடும் ஆகாது. வழிபாடு என்பது நம் உள்ளத்திற்குள் செல்வதாகும்.

ஆகவே, பொதுவாக நாம் இரண்டு விஷயங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும். அதில் விழிப்புடன் இருக்க வேண்டும். ஒன்று, எது தேவையற்றது என்று கண்டு கொள்கிறோமோ அந்த க்ஷணமே அதன்மீது நம் கவனத்தை செலுத்தக் கூடாது. அதை விட்டு விலகிச் சென்றுவிட வேண்டும்.

இரண்டாவது, நாம் தேவையானவற்றிற்கு மட்டும் ஆர்வம் காட்டுவது. இப்படிச் செய்வதால் நம் ஒவ்வொருவரிடமும் தெளிவும், ஆனந்தமும் பெருகுவதோடு நம் நகரங்கள்கூட இன்னும் அழகாகிவிடும். ஏனெனில், விளம்பரப் பலகைகளும், சுவர் விளம்பரங்களும் மறைந்துவிடும்.

எல்லா விளம்பர யுக்திகளும் நம் அறியாமை நிறைந்த மனத்தை நம்பித்தான் உள்ளன. வெறுமனே திரும்பத்திரும்ப தொடர்ந்து கூறுவது. ஒவ்வொருமுறை அதை நாம் கடந்து செல்லும்போதும் படிக்கிறோம். இதைப் படிப்பதை நம்மை அறியாமலேயே செய்கிறோம். இப்படி பலமுறை நாம் படிக்கும்போது ஒருநாள் அதை வாங்கி விடுகின்றோம்.

முந்தைய காலங்களில் பொருளாதார வல்லுனர்கள் எந்தவொரு பொருளை விற்க வேண்டுமானாலும், அது கிடைக்கவில்லை என்கிற சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அப்போதுதான் அதை அதிகம் விற்க முடியும் என்கிற அடிப்படைக் கொள்கையை வைத்திருந்தனர். ஆனால், இப்போதோ அதற்கு நேர்மாறான கொள்கை உள்ளது. எது அதிக அளவில் கிடைக்கிறதோ அதற்குத்தான் தேவையும் அதிகம் இருக்கும்படி செய்துவிட்டனர்.

ஏன் இதை இங்கு கூறுகிறோமெனில், இக்காலத்தில் நமக்குத் தேவையில்லாதன அதிகம் விளம்பரப்படுத்தப்படுகின்றது. எனவே, அதுகுறித்து ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். விழிப்புடன் இருந்தால் தேவையில்லாதனவற்றை நாம் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று யாரும் கட்டாயப்படுத்த முடியாது. **இப்படி தேவையற்றதின் மீது பற்று கொள்ளாதிருந்தால் நம் மேற்பரப்பின் வலிமை குறைந்து ஆன்மாவிற்கு செல்வதற்கான வழிகள் கிடைக்கும்.**

இவ்விதம் உண்மையை உணர்ந்து தேவையான விஷயங்களில் மட்டும் வாழ ஆரம்பித்தால் கொஞ்சம் கொஞ்சமாக நாம் இதற்கு முன்பு வழக்கமாக செய்துவந்த செயல்கள் எல்லாம் மறைய ஆரம்பித்துவிடும். இவைகளுக்காக நாம் செலவிட்டு வந்த சக்தி யாவும் இப்போது தேவையானவற்றில் கவனத்தை செலுத்துவதற்குக் கிடைத்துவிடும்.

ஆகவே அன்பரே! எப்போதும் நமது ஆன்ம வளர்ச்சிக்கு உதவிகரமாக இருப்பதையே கவனிக்க வேண்டும். கடவுள்மீது ஆசையை தூண்டும் நூல்களையே படிக்க வேண்டும். புதிய பார்வையை, தெளிவை கொடுப்பதையே பார்க்க வேண்டும். வாழ்க்கை மிகவும் குறுகியது. சக்தியும் குறிப்பிட்ட அளவுதான் உள்ளது. தேவையில்லாதவற்றில், முக்கியம் இல்லாதவற்றில் நமது நேரத்தை வீணாக்கக் கூடாது. அதற்கு விழிப்புணர்வுடனும், தன்னறிவுடனும் இருக்க வேண்டும். பொய்யை பொய் என்று கண்டு கொள்வதே, மெய்யை மெய் என்று கண்டு கொள்வதற்கான ஆரம்பம் எனக்கூறி முடித்தோம்.

# மூத்தோர் சொல் அமிர்தம்

கடவுளைக் கண்ணால் காண முடியுமா...? என்று ஒருவன் கேள்வி கேட்க வாரியார் சுவாமிகள், “உன் கேள்விக்குப் பதில் சொல்வதற்கு முன் ஒரு கேள்வி தம்பீ! இந்த உடம்பை நீ கண்ணால் பார்க்கின்றாயா?” என்று கேட்டார்.

அதற்கு அவனோ “எனக்கென்ன கண் இல்லையா? இந்த உடம்பை எத்தனையோ காலமாகப் பார்த்து வருகிறேன்!” என்றான்

உடனே வாரியார் அவர்கள், “தம்பீ! கண் இருந்தால் மட்டும் போதாது கண்ணில் ஒளியிருக்க வேண்டும். காது இருந்தால் மட்டும் போதுமா? காது ஒலி கேட்பதாக அமைய வேண்டும். அறிவு இருந்தால் மட்டும் போதாது அதில் நுட்பமும் திட்பமும் அமைந்திருக்க வேண்டும்.

உடம்பை நீ பார்க்கின்றாய் எனில் இந்த உடம்பு முழுவதும் உனக்குத் தெரிகின்றதா?” என்று கேட்டார்.

அதற்கு அவன், “ஆம். நன்றாகத் தெரிகின்றது” என்றான்.

இப்போது வாரியார், “அப்பா! அவசரப்படாதே. எல்லாம் தெரிகின்றதா?” எனக் கேட்டார்.

அவனோ “என்ன ஐயா. தெரிகின்றது தெரிகின்றது என்று எத்தனை முறை கூறுவது? எல்லாம்தான் தெரிகின்றது?” என்றான் சலிப்புடன்.

வாரியார், “அப்பா! எல்லா அங்கங்களும் தெரிகின்றனவா?” என கேட்க அவனோ, “ஆம்! தெரிகின்றன” என்றான்.

“முழுவதும் தெரிகின்றதா...?” என மீண்டும் கேட்க அவன் சற்று எரிச்சலுடன் உரத்த குரலில், “முழுவதும் தெரிகின்றது” என்றான்!

“தம்பீ! உன் உடம்பின் பின்புறம் தெரிகின்றதா?” என்ற வாரியாரின் கேள்விக்கு மாணவன் விழித்தவாறு “ஐயா! பின்புறம் தெரியவில்லை” என்றான்.

“தம்பீ! முதலில் தெரிகின்றது தெரிகின்றது என்று பலமுறை சொன்னாய். இப்போது பின்புறம் தெரியவில்லை என்கின்றாயே.

சரி, முன்புறம் முழுவதுமாவது தெரிகின்றதா?” என வாரியார் கேட்க, “முன்புறம் முழுவதும் தெரிகின்றதே!” என்றான் சற்று சந்தேகத்துடன்.

*“நிதானித்துக் கூறு!” என சுவாமி அவர்கள் கேட்க, “எல்லாப் பகுதிகளையும் காண்கின்றேன்...!! எல்லாம் தெரிகின்றது!!” என்றான்.*

*“தம்பீ! முன்புறத்தின் முக்கியமான முகம் தெரிகின்றதா?” என்று கேட்க மாணவன் துணுக்குற்றான்.*

*பின்பு தணிந்த குரலில் பணிந்த உடம்புடன், “ஐயனே! முகம் தெரியவில்லை!” என்றான்.*

*“குழந்தாய்! இந்த ஊன உடம்பில் பின்புறம் முழுவதும் தெரியவில்லை! முன்புறம் முகம் தெரியவில்லை! நீ இந்த உடம்பில் சிறிது தான் கண்டிருக்கிறாய்! இருப்பினும் கண்டேன் கண்டேன் என்று பிதற்றுகின்றாய்!*

*அன்பனே! இந்த உடம்பு முழுவதும் தெரிய வேண்டுமானால், இரு நிலைக் கண்ணாடிகளின் இடையே நின்றால் உடம்பின் இரு புறங்களும் தெரியும்! இந்த ஊன் உடம்பை முழுவதும் காண்பதற்கு, இருநிலைக் கண்ணாடிகள் தேவைப்படுவது போல், ஞானமே வடிவாய் உள்ள கடவுளைக் காண்பதற்கும் இரு கண்ணாடிகள் வேண்டும். ஒரு கண்ணாடி திருவருள்! மற்றொன்று குருவருள். திருவருள், குருவருள் என்ற இரு கண்ணாடிகளின் துணையால், ஞானமே வடிவான இறைவனைக் காணலாம்!”*

*“தம்பீ...! திருவருள் எங்கும் நிறைந்திருப்பினும், அதனைக் குருவருள் மூலமே பெறமுடியும்! திருவருளும் குருவருளும் இறைவனைக் காண இன்றியமையாதவை!” என்று விளக்கம் அளித்ததும், அந்த மனிதன் தன் தவறை உணர்ந்து அவரின் காலில் விழுந்தான்.*

---

*ஓர் அரசனிடம், ஹடயோகி ஒருவன், தான் பூமிக்கடியில் புதைக்கப்பட்டால் பல நாட்கள் கிடக்கக்கடவன் என்றும், தன்னை பூமியில் குழிதோண்டி புதைத்துவிட்டு குறிப்பிட்ட நாட்களுக்குப்பின் தோண்டி எடுக்கும்படியாகவும் தான் அப்போதும் உயிரோடு மீள்வேன் என்றும், பிறகு தனக்கு சன்மானம் செய்து அனுப்பும்படி கேட்டுக் கொண்டான்.*

*அரசன் அவ்வாறே ஏற்பாடு செய்தான். மக்கள் இந்த அதிசயத்தைக் காண கூடிவிட்டனர். யோகி நதிக்கரையில் புதைக்கப்பட்டான்.*

*நாட்கள் சில கடந்தன. திடீரென்று ஒருநாள் மழை வந்து வெள்ளம் பெருகி, யோகி புதைக்கப்பட்ட நதிக்கரையில் நீர் பெருக்கெடுத்தது. அனைவரும் யோகி மாண்டதாகவே எண்ணினர்.*

*ஓரிரு நாட்களில் நீர் வற்றியது. பிதையுண்ட யோகி கரையில் தள்ளப்பட்டு அசைவற்றுக் கிடந்தான். அரசனும் ஊராரும் அதனைக் கண்டு யோகி மாண்டதாகவே எண்ணி அவனைப் புதைக்க ஏற்பாடு செய்தனர்.*

*அப்போது, அங்கே யோகி ஒருவர் வந்தார். உடலைப் பார்த்தார். ஹடயோகி மூச்சைக் கட்டுப்படுத்துவதில் ஏற்பட்ட தவறினை அறிந்தார்; அவன் இறக்கவில்லை என்பதை உணர்ந்த அவர், தமது யோக சாதனை அறிவாலும், அனுபவத்தாலும் கீழே கிடந்த யோகியின் உடலில் ஓர் நரம்பினைப் பற்றி சுண்டிவிட்டார். அடைபட்ட பிராணன் வெளிப்பட்டது; யோகி உயிர்பிழைத்தான். இங்குதான் ஓர் விந்தை நடந்தது.*

*அந்த யோகி எழும்போதே, "எங்கே என் சன்மானம்? எங்கே என் சன்மானம்?" எனக் கூவிக்கொண்டே எழுந்தான்.*

*எவ்வளவு சித்திகளைப் பெற்றாலும், வாசனைப் பதிவுகளான ஆசை ஒழியவில்லையெனில் முக்தி கிட்டுவதில்லை.*


*பூரண நிலை அடைந்தவன் உள்ளத்தே இச்சைக்கு இடமில்லை. அட்டமா சித்திகள் ஆத்ம ஞானம் பெறும் வழியில் தடைக்கற்களே என அவன் நன்கறிவான். சித்திகளால் இறைநாட்டம் தளர்ந்துபோகும். தகர்ந்துபோகும்.*

**சாதனங்கள் ஒன்றும் வேண்டாம். ஏதேனும் ஒரு சாதனம் சொல்லக் கேட்டு அதன்படி நடந்தால் சிறுவொளி உண்டாகும். அதைக் கண்டு பல்லிளித்து இருமாந்து கெட நேரிடும். எனவே காலம் தாழ்த்தாது எல்லா உயிரையும் தன்னுயிர்போல் பார்க்கும் உணர்வை வருவித்துக் கொள்ளுதல் வேண்டும். இதுவே சாதனம். – வள்ளலார்.**

திருச்சிற்றம்பலம்

**Advertisement**

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



பெயர் : M. விஜய்
பிறப்பு : 09.10.1989
படிப்பு : DME, DCHN
உயரம் : 185 CM

எதிர்பார்ப்பு:
சைவ உணவு பழக்கம்
சாதி தடையில்லை.

**மணமகள் தேவை**

முழு விபரங்களுக்கு;
98, MIG, தாமரை நகர்,
திருவண்ணாமலை.
99524 99054
80723 21618

# அருள்நிலையுறுவோம்

தயவுதிரு. இராம இருசுப்பிள்ளை அவர்கள், கோவை

**ந**ம் முன்னோர்கள் இறைநிலை பற்றியும் அந்நிலை எய்தவல்ல நெறிகள் பற்றியும் பல்வேறு வழிமுறைகளை அருளியுள்ளனர். அவை அனைத்தையும் ஒன்று திரட்டி **"கோளில் பொறியில் குணம் இலவே எண் குணத்தான் தாளை வணங்காத் தலை"** என்ற குறளில் பரம்பொருளின் இயல்புகளை எட்டாகக் கூறலாம் என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். அவை **தன்வயத்தனாதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை, வரம்பில் இன்பம் உடைமை** என்பனவாகும் என பிற ஞானியர்களும் பரிமேலழகர் போன்ற அறிவாய்வில் நிறைந்தாரும் கூறுவன.

"எட்டுக் கெலாம் அவர் ஈறுஇல் பெருங்குணம்" எனவும்; "எட்டு வான்குணத்து ஈசன் எம்மான்" எனவும்; "காதல் எண்குணவன் காண்" எனவும் அப்பர் பெருமான் கூறுவதனையும் "இறையவனை மறையவனை எண்குணத்தினானை" என சுந்தரர் பெருமான் கூறுவதனையும் ஈண்டு நினைந்து பார்க்கலாம்.

அத்தகு இறைநிலை உறுவதற்கு இந்நாட்டுத் தத்துவங்கள் பல்வேறு நெறிகளைக் காட்டியுள்ளன. அவையெலாம் **சாயுச்சிய** நிலையெனும் ஒன்றுபட்டு நிற்கும் நிலையைத்தான் இறுதியாகக் காட்டுவன.

ஒரு பானை நிறைய இனிய தேன் நிரப்பப்பட்டுள்ளது. அதன் சுவையைச் சுவைக்கத் தேனீக்கள் பல திரண்டு எழுந்தன. சில பானை ஓரத்தில் இருந்து சுவைத்தன; பல தேனில் மூழ்கிச் சுவைக்க எண்ணித் தேனிலேயே மூழ்கின; தன்னை இழந்தன; அவையே இல்லாதபோது சுவை எங்கே? சுவைப்பது எங்கே? அதுபோன்று சாயுச்சியமாம் ஒன்றுபடு நிலையில் தன்னை இழந்து தம்பெருமான் அருளனுபவத்தை இழக்க வேண்டியதாகிவிடுகிறது. புல்லாகி, பூடாய், புழுவாய், மரமாய், கல்லாகி எனப் பலநிலைகளைத் தாண்டி மனித நிலையுற்ற பின்னர் (மனிதன்=மன்+நிதன் மன்=நிலைபேறு; நிதன்=எப்போதும் இருப்பவன்) நிறைநிலையாய் என்றும் நிலைத்து வாழ்ந்து, ஞானானந்த அனுபவமாய் விளங்குபவன் என்பது தெளிவு.

சாயுச்சிய நிலையாம் இறைநிலையோடு சமாதி நிலையில் ஒன்றுபட்ட ஆன்மாவால், இறை அனுபவத்தை அனுபவிக்க முடியாது; அதுதான் ஒன்றுமற்றதாக கரைந்து விட்டதே.

*எனவே, தேனை பானையின் விளிம்பிலிருந்து சுவைத்த தேனீக்கள் போல இறை அனுபவம் பெற்ற ஆன்மா என்றும் நின்று ஆனந்தமாக வாழும் நெறிமுறைகள் உள்ளன.*

*முதலில் ஆன்மாவும் பரமான்மாவும் பிரிக்கவியலா உறவு நிலையில் உள்ளன என்ற உண்மையில் தெளிவும் உறுதியும் இருத்தல் வேண்டும்.*

**"பிரிவிலவாய்ப் பிரிவுளவாய்ப் பிறங்கியுடல் கரணம்**
**நண்ணிடத் தேர்ந்து இயற்றி அதின் நடுநின்று விளங்கும்**
**நல்ல திருவடிப்பெருமை சொல்லுவதார் தோழி"**

**(திருஅருட்பா, திருவடிப்பெருமை 33)**

**"எனக்குள் நீயும் உனக்குள் நானும் இருக்கும் தன்மையே"**

**(திருஅருட்பா, மெய்ப்பொருள் விளக்கம் 25)**

**"போற்றி இப்புவனம் நீர் தீ காலொடு வானம் ஆனாய்**
**போற்றி எவ்வுயிர்க்கும் தோற்றம் ஆகி; நீ தோற்றம் இல்லாய்**
**போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாய்; ஈறு இன்மை ஆனாய்**
**போற்றி ஐம்புலன்கள் நின்னைப் புணர்கிலாப் புணர்க்கையானே"**

**(திருவாசகம்)**

*இப்படி எல்லாமாகி நிற்கின்ற இறைநிலையே ஏதும் தான் அல்லாதாய்த் திகழ்கின்றது எனக்கூறி மாணிக்கவாசகப் பெருமான் அருளியுள்ளார். அடுத்து ஆன்மாவுக்கும் பரமான்மாவுக்கும் உள்ள உறவு நிலையை நாவுக்கரசர் பெருமான்,*

**விண்ணாகி நிலனாகி விசும்புமாகி வேலை சூழ்ஞாலத்தார் விரும்புகின்ற**
**எண்ணாகி எழுத்தாகி இயல்புமாகி ஏழுலகும் தொழுது ஏத்திக் காண நின்ற**
**கண்ணாகி மணியாகிக் காட்சியாகிக் காதலித்து அங்கு அடியார்கள் பரவநின்ற**
**பண்ணாகி இன்னமுதாம் பாசூர்மேய பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்தவாறே.**

*எனக்கூறித் தெளிவுபடுத்துகிறார்.*

**மண்ணல்லை விண்ணல்லை வலயம் அல்லை,**
**மலையல்லை கடல்அல்லை வாயு வல்லை**
**எண்ணல்லை எழுத்தல்லை எரியும் அல்லை**
**இரவல்லை பகல்அல்லை யாவும் அல்லை**
**பெண்ணல்லை ஆணல்லை பேடும் அல்லை;**
**பிறிது அல்லை ஆனாயும் பெரியாய் நீயே**
**உண்ணல்லை நல்லார்க்குத் தீயை அல்லை**
**உணர்வறிய ஒற்றியூர் உடைய கோவே.**

*எனவும் கூறி இறைநிலையே எல்லாமாக இருப்பினும் எதுவும் அதுவாக இல்லை எனச் சிந்திக்க வைக்கிறார்.*

*இந்த உறவைப் புரிந்து தெளிவுற்று அதுவாக விளங்கும் நிலையுற வழி என்ன?* ***அருள்நிலையுறுதல்தான்,*** *அருள்நிலை நின்றால் அன்றி தெருள் நிலைபெறுதல் இயலாது.*

**நண்ணிய மதவெறி பலபல அவையே நன்றற நின்றன சென்றன சிலவே**
**அண்ணிய உலகினர் அறிகிலர் நெடுநாள் அலைதருகின்றனர் அலைவற மகனே**
**புண்ணியம் உறுதிரு அருள்நெறி இதுவே பொதுநெறி எனஅறிவுற முயலுதிநீ**
**தண்ணிய அமுதுணத் தந்தனம் என்றாய் தனி நடராச என் சற்குருமணியே**

*(திருஅருட்பா; சற்குருமணிமாலை 14)*

**தயைஉடையார் எல்லாரும் சமரச சன்மார்க்கம் சார்ந்தவரே**
**ஈங்கவர்கள் தம்மோடும் கூடி நயம் உறு நல்**
**அருள்நெறியில் களித்து விளையாடி நண்ணுக**

*(அருட்பா சுத்த சன்மார்க்க வேண்டுகோள் 74)*

**“அருள்ஒளி என்தனி அறிவினில் விரித்தே**
**அருள்நெறி விளக்கெனும் அருட்பெருஞ்ஜோதி”**

*(திருஅருட்பா அகவல் 275 - 276)*

**“அருள் அலாது அணுவும் அசைந்திடாது அதனால்**
**அருள் நலம் பரவுக என்று அரைந்த மெய்ச்சிவமே”**

*(திருஅருட்பா அகவல் 977 - 978)*

**“அருள்நெறி ஒன்றே தெருள்நெறி மற்றெலாம்**
**இருள்நெறி என எனக்கு இயம்பிய சிவமே”**

*(திருஅருட்பா அகவல் 981 - 982)*

**“அருள் நிலை ஒன்றே அனைத்தும் பெறும் நிலை**
**பொருள்நிலை காண்க எனப் புகன்ற மெய்ச்சிவமே”**

*(திருஅருட்பா அகவல் 995 - 996)*

என்றெலாம் வள்ளற் பெருமான் வெளிப்படுத்தி அருளே அனைத்தும் பெறுநிலை எனக்கூறி, அருள் நிலையுறுதல்தான் மெய்நிலை உணர்வுக்கு வழிமுறை என்று விளக்கியுள்ளார். தாயுமானவரும்,

**“அருளால் எவையும்பார் என்றான் – அதனை**
**அறியாதே சுட்டிஎன் அறிவாலே பார்த்தேன்**
**இருளான பொருள்கண்ட தல்லால் – கண்ட**
**என்னையும் கண்டிலன் என்னேடி தோழி”**

*(ஆனந்தக் களிப்பு 13)*

**“தன்னை அறிந்து அருளே தாரகமா நிற்பதுவே**
**உன்னை அறிதற்கு உபாயம் பராபரமே”** *(பராபரக் கன்னி 96)*

*எனக்கூறி மெய்பொருள் உணர்வுக்கு அருள்நிலையுறுதலே வழி என்கிறார்.*

*காரைக்கால் அம்மையார் தமது அற்புதத் திருவந்தாதிகளில்*

**"அருளே உலகெலாம் ஆள்விப்பது; ஈசன்**
**அருளே பிறப்பு அறுப்பது; ஆனால் – அருளாலே**
**மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும்**
**எப்பொருளும் ஆவது எனக்கு" (அற்புதத் திருவந்தாதி)**

*எனக்கூறி அருள்நெறியின் பெருமையை விளக்கியுள்ளார்.*

*ஈசன் அருளே உலகெலாம் ஆள்விப்பது, பிறப்பும் அறுப்பது என்பதால் அவன் அருளாலே யான் மெய்ப்பொருளையும் நோக்கும் விதியுடையவன். ஆதலின் எனக்கு எஞ்ஞான்றும் எப்பொருளும் ஆவது அவன் அருளே என்கிறார். அருள்நிலை நின்று அருள்நெறி பற்றி அருளால் விளங்கப் பெற்றவர்கள் மன்னுயிர் எல்லாம் தன்னுயிர் என எண்ணி இன்புறுவர்; மன்னுயிர் எல்லாம் கடவுளின் வடிவம் என்று உணர்ந்து ஒழுகுவர். "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்பதில் தெளிவுபெற்றவராய் விளங்குவர். இறைநிலையை உணர்ந்து வாழ்பவராய் இருப்பர்.*

**"எத்துணையும் பேதம் உறாது**
**எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணிஉள்ளே**
**ஒத்து உரிமை உடையவராய்**
**உவக்கின்றார் யாவர்அவர் உளம்தான்**
**சுத்த சித்துருவாய் எம்பெருமான்**
**நடம்புரியும் இடம்....."** *(திருஅருட்பா தனித்திரு அகவல் 2)*

*என்பதில் தெளிவாய் இருப்பர்.*

*அருள்நெறி என்பது யாது? சிவஞான சித்தியார் என்ற சைவ சித்தாந்த நூலுள்,*

**"அருளது சக்தியாகும் அரன்தனக்கு அருளை இன்றித்**
**தெருள்சிவம் இல்லை அந்தச் சிவம் இன்றிச் சக்தி இல்லை**
**மருளினை அருளால் வாட்டி மன்னுயிர்க்கு அளிப்பன் கண்கட்டு**
**இருளினை ஒளியால் ஓட்டும் இரவியைப் போல ஈசன்"**

*(சிவஞான சித்தியார்; பக்கம் 9)*

*என்ற பா உள்ளது. சிவம் மற்றும் அருள் வேறு வேறானவை அல்ல. சிவம் ஒளி, அருள் அதன் குணம் என்பது விளக்குகின்றது. கதிரவன் தன் ஒளியால் இருளை ஓட்டுவது போன்று, இறைநிலை தன் அருளாகிய ஆற்றலால் எல்லாவற்றையும் செய்கின்றது என்கிறார்.*

*அருள் நிலையுற்றார், உள்ளொளி பெருக வாழ்வர், அவர் உடம்பு சுத்த உடம்பாகி, பிரணவ உடம்பாகி, ஞான உடம்பாக விளங்கி அழியாப் பெருநிலையுற்று இறைநிலை தெளிந்து என்றும் இருந்து ஞானானந்த அனுபவத்தில் திளைப்பர்.*

*இதனை வள்ளலார்,* **"ஒன்றெனக் காணும் உணர்ச்சி என்று உறுமோ ஊழிதோறூழி சென்றிடினும் என்றும் இங்கு இறவா இயற்கை என்று உறுமோ"** *எனக் கூறி மரணம் - செயற்கை, இறவா நிலையே இயற்கை எனவும் சிந்திக்க வைக்கின்றார்.*

*வள்ளற் பெருமானாரின் சுத்த சன்மார்க்க நெறி என்பது சாகாத நெறியே என்பதனைப் பல இடங்களில் சுட்டிச் செல்கிறார். அவற்றுள் ஒன்று,*

**"சாகாத கல்வியே கல்வி, ஒன்றே சிவம்**
**தான்என அறிந்த அறிவே தகும்அறிவு, மலம் ஐந்தும்**
**வென்றவல்லபமே தனித்த பூரணவல்லபம்**
**வேகாத காலாதி கண்டுகொண்டு எப்பொருளும் விளைய**
**விளைவித்த தொழிலே மெய்த்தொழிலதாகும் இந்நான்கையும்**
**ஒருங்கே வியந்து அடைந்து உலகம் எல்லாம்**
**மாகாதலுற எலாம்வல்ல சித்தாகி நிறைவான**
**வரமே இன்பமாம் மன்னும் இதுநீ பெற்ற**
**சுத்தசன்மார்க்கத்தின் மரபு என்று உரைத்த குருவே**
**தேகாதி மூன்றும் நான்தருமுன் அருள் செய்து**
**எனைத்தேற்றி அருள் செய்த சிவமே**
**சிற்சபையின் நடுநின்ற ஒன்றான**
**கடவுளே தெய்வ நடராச பதியே"** *(திருஅருட்பா; நடராசப் பதிமாலை)* *என்பதாகும்.*

**"அருள்நிலை ஒன்றே அனைத்தும் பெறும் நிலை,**
**பொருள் நிலை காண்க எனப் புகன்ற மெய்ச்சிவமே;**

**அருள் வடிவு அதுவே அழியாத் தனிவடிவு**
**அருள்பெற முயலுக என்று அருளிய சிவமே"**


*(திருஅருட்பா; அகவல் 995 - 998)*

*என்று கூறி அருளுறின் எல்லாம் ஆகும் என்பதனைத் தெளிவு படுத்துகின்றார்.*

**மன்** *என்றால்* **நிலைபேறு** *என்பது பொருள். மனிதர்களால்தான் அவர்களின் பெயருக்கேற்ப நிலைபேற்று வாழ்வு பெற்று என்றும் வாழ்ந்திட முடியும். அவ்வாறு வாழ இறையருள் சித்திக்குமாக!*

"ஒரு வஸ்துவினிடத்தில் பற்றுதல் அவா. அதை அநுபவிக்க வேண்டும் என எழுந்தது ஆசை. அதன் மயமாதல் காமம். அதைத் தன்வசப்படுத்த எழுவது மோகம். எந்த வஸ்துவினிடத்திலும் மோகமாதிகளின்றி அவாமயமாய் நிற்றல் வேண்டும்."
*- வசனபாகம்*

## யாக்கை நிலையாமை



திருமந்திரம்

**வளத்து இடை முற்றத்து ஓர் மாநிலம் முற்றும்**
**குளத்து மண் கொண்டு குயவன் வனைந்தான்;**
**குடம் உடைந்தால் அவை ஓடு என்று வைப்பர்**
**உடல் உடைந்தால் இறைப்போதும் வையாரே.**

*உலகம் முழுதும் உள்ள மக்களைப் பிரமன் படைத்தான் எவ்வாறு? பிரமன் ஆகிய குயவன், மாயை என்ற குளத்தில் மண் எடுத்து, தாயின் இடையாகிய முற்றத்தில் வனைந்தான். குடம் உடைந்தால் ஓடு உதவும் என்று பாதுகாத்து வைப்பர். உடல் உடைந்தால் கணப்பொழுதும் பாதுகாக்கமாட்டார்.*

## நல்குரவு (இரையை அல்ல, இறையைத் தேடு)

**பொய்க்குழி தூர்ப்பான் புலரி புலருக என்று**
**அக்குழி தூர்க்கும் அரும்பண்டம் தேடுவீர்**
**எக்குழி தூர்த்தும் இறைவனை ஏத்துமின்**
**அக்குழி தூரும் அழுக்கு அற்ற போதே**

*நிரம்பியது போல் தோன்றி, நிரம்பாமல் இருக்கும் வயிற்றை நிரப்பும் பொருட்டே 'பொழுது விடிக' என்று இருந்து, விடிந்ததும் உணவைத் தேடுவீர்! எதை எதை நிரப்பினாலும், இறைவனைத் தேடுக; வழிபடுக. உங்கள் வினை குறைந்தால் குறைகள் எல்லாம் நீங்கும்.*

## சிவ பூசை (பாட்டே படையல்)

**வேட்டு, அவி உண்ணும் வரிசடை நந்திக்கு**
**காட்டுஅவி நாம் இலம்; காலையும் மாலையும்**
**ஊட்டு அவி ஆவன உள்ளம் குளிர்விக்கும்**
**பாட்டு அவி; காட்டுதும்; பால் அவி ஆமே.**

*ஆன்ம போதமாகிய அவியுணவை விரும்பி உண்ணும் சிவபெருமானுக்கு, அதனை நாம் அளிக்க இயலாது. காலையும் மாலையும் நாம் ஊட்டத்தக்க அவியுணவு, அவனது உள்ளத்தைக் குளிர்விக்கும் பாட்டே ஆகும். அது பாற்சோற்றை ஒத்ததுமாகும். ஆகவே எம்பெருமானுக்கு அதனை அளிப்போம்.*

திருச்சிற்றம்பலம்

## தருமம் செய்ய விரும்பும் நெஞ்சங்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்

*அன்பர்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நாள், பிறந்த நாள் போன்ற தினங்களிலும், இறந்தவர்களின் நினைவு நாள் போன்ற நாட்களிலும் திருவண்ணாமலையில் அமைந்துள்ள நமது வள்ளலார் சத்திய தருமச்சாலையில் அன்னதானம் செய்யலாம்.* **தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின்கீழ் வருமானவரி விலக்கு உண்டு.**

### ஒரு நாளுக்கான அன்னதான நன்கொடை

| | |
|---|---|
| காலை அரசு மருத்துவமனையில் கஞ்சி வார்த்தல் | -ரூ.2,000/- |
| காலை அன்னதானதிற்கு | -ரூ.2,500/- |
| மதிய சிறப்பு அன்னதானதிற்கு | -ரூ.8,500/- |
| மதிய அன்னதானதிற்கு | -ரூ.5,000/- |
| இரவு சிறப்பு அன்னதானதிற்கு | -ரூ.6,500/- |
| பௌர்ணமி சிறப்பு அன்னதானதிற்கு | -ரூ.15,000/- |
| பசு பராமரிப்பிற்கு (ஒரு நாளைக்கு) | -ரூ.2,500/- |
| அணையா தீபத்திற்கு Oil (5 இடங்களுக்கு) -15லி | -ரூ.1,900/- |

**தங்களது அன்னதான நாட்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்**

Please donate - Cheque / DD In favour of

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

Please donate through: **HDFC Bank Ltd.,**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**A/c No. : 08761450000048 IFSC Code: HDFC0000876**

**Please send MO to:** *அருள்திரு* **பாபு சாது**

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை,

கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை அஞ்சல்,

திருஅண்ணாமலை - *606 604.*

*செல்:* +91 9443489849, +91 9942776351

*அன்னதானம் பற்றிய விபரங்களுக்கு:-*

**+91 9487454688**

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தின் இயற்கை சூழலில்...

# பஞ்ச சுத்தி கிரியா

உடல்உறு பிணியால் உயிர்உடல் கெடாவகை
அடல்உறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
- அகவல்

"உடல் நலம், மன அமைதி பெற்று ஆரோக்கிய வாழ்வு வாழ மூன்று நாட்கள்"



**இம்முகாமில்...**

- பஞ்ச சுத்தி முறை
- யோகாசனம்
- பிராணாயாமம்
- மௌனம்
- தியானம்
- பக்தி

போன்றவை நடைபெறும்

மார்ச்
29, 30, 31
2019

நாள்: ஜூலை 29, 30 & 31 வெள்ளி, சனி, ஞாயிறு
(மூன்று நாட்கள் முழுவதும்)

இடம்: வள்ளலார் சன்மார்க்க சங்கம்,
பெருமாள் மலை அடிவாரம், அர்த்தநாரிபாளையம்,
**பொள்ளாச்சி.**

## பயிற்சியில் கலந்து கொள்ளும் அன்பர்கள் கவனத்திற்கு

1. அன்பர்கள் மார்ச் 28 வியாழன் இரவிற்க்குள் வந்துவிட வேண்டும்.
2. பயிற்சியில் கலந்து கொள்வோர் 18-60 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும்.
3. யோகாசனம் செய்வதற்கும், படுப்பதற்கும் இரண்டு பெட்ஷீட் மேலும் ஆண்கள்: T.ஷர்ட், ஷார்ட்ஸ் பெண்கள்: சுடிதார் போன்ற ஆடைகளை எடுத்துவரவும். குறிப்பு எடுக்க நோட்டு பேனா எடுத்துவரவும்.

பஸ் ரூட்: பொள்ளாச்சியிலிருந்து பஸ் எண்: 16, 27, 58 (கடைசி பஸ் இரவு 9:30க்கு)
உடுமலைபேட்டையிலிருந்து பஸ் எண்: 28, 34 (கடைசி பஸ் இரவு 8:30க்கு)

சைவ உணவாளர்களுக்கு மட்டுமே அனுமதி

உங்கள் ஆரோக்கியத்திற்கான நன்கொடை ரூ. 1,500/-

40 நபர்களுக்கு மட்டுமே அனுமதி

முன்பதிவிற்கு:
**88385 40176, 89403 96760**



Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly February 2019, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2017-19 Posted at Tiruvannamalai on 16th of every month,
WPP License No. TN/PMG(CCR)/WPP 582/2018-2019
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி

தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

## சுத்த சன்மார்க்க சத்திய ஞானாச்சாரம்

கடவுள் சர்வ ஜீவதயாபரர். சர்வ வல்லபமுடையவர் ஆகையால் அவர், நம்மையும் சர்வ ஜீவதயவு உடையவர்களாய்ச் சர்வ வல்லபத்தையும் பெற்றுக் கொள்ளும்படி மனித தேகத்தில் வருவித்தார்.

எந்த ஜீவர்களிடத்தில் தயாவிருத்தியாகிய 'அருள்' விசேஷம் விளங்குகின்றதோ அந்த ஜீவர்களிடத்தில் 'கடவுள் விளக்கம்' விசேஷயமாயிருக்கும் மற்றயர்கள் இடத்தில் காரியப்படாது. ஆதலால் மலஜல சங்கல்ப காலங்கள் தவிர மற்றக்காலங்களில் கடவுளிடத்தில் அன்பும், ஜீவர்களிடத்தில் தயையும் செலுத்த வேண்டும்.

எல்லா உயிர்களிடத்தும் கடவுள் வியாபித்திருப்பதை அறிதலே ஈசுவர பத்தியாம். ஜீவகாருண்யம் உண்டானால் அன்புண்டாகும் அன்புண்டானால் அருளுண்டாகும் அருளுண்டானால் சிவானுபவம் உண்டாகும்.

திரு/திருமதி

Redirect to : அருள்திரு பாபு சாது
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை – 606 604. Call : 94434 89849, 99427 76351

சந்தா பற்றிய விபரங்களுக்கு அணுகவும்: +91 80126 80865